பொ.ச.மு.கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர்

(கொழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணி நிட்டம்புவவில் நடாத்திய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பொது பல்லாயிரக்கணக்கான மக்கள் சமூகமளித்திருந்தனர் என்று பி.பி.சியின் செய்தியாளர் எல்மோ பெர்ணாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமினி பொன்சேகாவும் கூட்டத்தில் பேசினார். மேடையின் இருபக்கமும் சந்திரிகா குமாரணதுங்காவின் 'கட்டவுட்' படங்கள் வைக்கப்பட்டிருந்தன. கூடுதலாக பெண்கள் தான் கூட்டத்தில் சமூகமளித்திருந்த

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 2 இதழ் 164
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-7-1994

தேர்தல் குறித்து ஐ.தே.க. அதிர்ச்சி நிலையில்

(கொழும்பு)
எதிர்வரும் தேர்தல் குறித்து ஐ.தே.க. வினர் பெரும் அதிர்ச்சி அடைந்திருப்பதாக தெரிவதாக பி.பி.சி கொழும்பு முகவர் தெரிவித்துள்ளார்.

எதிரணியினருக்கான ஆதரவு பெருகி வருகிறது பொதுசன முன்னணி நிட்டம்புவவில் நடாத்திய கூட்டத்திற்கு வந்திருந்தோர் தொகை கண்டியில் ஐ.தே. கவினர் நடாத்திய கூட்டத்திற்கு வந்தோர் தொகையிலும் அதிகம்.

இம்முறை தேர்தலில் ஆட்சி மாற்றம் தேவை என்பதில் பெருமளவு மக்கள் ஆர்வமாயுள்ளனர். ஐ.தே.க. வின் ஆட்சியில் பெரும் வெறுப்பு மனநிலை ஏற்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

★ தேர்தலுக்கு முன்னர்

மனித உரிமைக் கொள்கைகளை கட்சிகள் வெளியிட வேண்டும்!

- சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை -

(கொழும்பு)
எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் யாவும், தங்கள் தங்கள் கட்சிகளின் மனித உரிமைகள் பற்றிய கொள்கைகளைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை சகல அரசியல் கட்சிகளையும் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

மன்னிப்புச் சபையின் கடிதத்தின் விபரம் வருமாறு: கடந்த காலங்களில் வன்செயல்களும், மனித உரிமை மீறல்களும் அதிகமாக நிகழ்ந்துள்ளன. மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் நாட்டில் சாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தவும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் வேறு

(4-ம் பக்கம் பார்க்க)

● அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும்

சிறைகளில் வாடுவோருக்கு உடன் விடுதலை கிடையாது

(கொழும்பு)
அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்டபோதிலும் அந்தச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுகள் அனைத்தும் தொடர்ந்து

(4ம் பக்கம் பார்க்க)

அவசரகாலச் சட்டத்தின் கீழ்,

தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்க முடியாத நிலை

(கொழும்பு)
அவசரகாலச் சட்டம் காலாவதியான ஜூலை 15ம் திகதிக்குப் பின்னர் கைதாகும் எந்தவொரு நபர் மீதும் அவசரகாலச்சட்ட விதிகளின் கீழான தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்க முடியாதென்று பாதுகாப்பு அமைச்சின் சட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி சட்டம் காலாவதியானதை தொடர்ந்து அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்படுவோர் சாதாரண சட்டத்தின் கீழே தடுப்புக்காவ

(4ம் பக்கம் பார்க்க)

ரி.வி., வானொலியில் டி. பி. பேசமாட்டார்

(கொழும்பு)
ஜனாதிபதி விஜேதுங்க தேர்தலையொட்டி வானொலி மூலமோ, தொலைக்காட்சி மூலமோ பிரசாரம் செய்யமாட்டாரென தெரிவிக்கப்படுகிறது.

பொதுத்தேர்தலில் இவர் ஒரு வேட்பாளர் இல்லாததால் இவ்வாறு வானொலியோ, தொலைக்காட்சியிலோ பிரசாரம் செய்யமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி வானொலி, தொலைக்காட்சி மூலம் பிரசாரம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளிவந்ததற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தபோதே இவ்வாறான அறிவிப்பு வெளிவந்துள்ளது.

-இ

● வால் நட்சத்திரம் மோதியதால் வியாழன் கிரகத்தில்

பூமி அளவில் குழி

(ஜோகனஸ்பேர்க்)
ஷூமேக்கர் லெவி 9 என்ற வால்வெள்ளியின் துண்டுகளில் ஒன்று நேற்று அதிகாலை 1-48 மணியளவில் வியாழன் கிரகத்துடன் மோதியதால், பூமியின் அளவிலான ஒரு பாரிய குழி ஏற்பட்டுள்ளது.

வால்வெள்ளியின் துண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் வன்செயல் தெற்கில்குறைவாம்

(கொழும்பு)
தேர்தலோடு தொடர்புடைய வன்செயல்கள் எதுவும் கடந்த நான்கு தினங்களில் நடைபெற்றதாக முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில இடங்களில் சிறிய அசம்பாவிதங்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் நாட்டின் நிலைமை அமைதியாகவே இருப்பதாக பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பாதுகாப்பிற்கு பொறுப்பாகவுள்ள பிரதி

(4ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னையைத் தீர்க்க உறுதியான அரசு தேவை

- டி. பி. கூறுகிறார்

(கண்டி)
இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்க்க உறுதியான அரசு தேவை. என்று நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

● தீவுப் பகுதிக்கு வரும்

தமிழ் கட்சி வேட்பாளர்களின் பாதுகாப்பு கடற்படையிடம்!

(கொழும்பு)
யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள தேர்தலின் போது பிரசாரத்திற்காக தீவுப்பகுதி வரும் தமிழ், முஸ்லிம் கட்சி வேட்பாளர்களின் பாதுகாப்பை கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பி யினரிடமிருந்து ஆயுதங்களை களைந்து தங்கள் பாதுகாப்பிற்கு உறுதி வழங்க வேண்டும் என்ற தமிழ்க்கட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

பாலமுருகன் வண்ணப் படம்

தேசமே வியந்தாடும் ரஜினியுடன் ஞானவேல் [illegible] "அஞ்சேல்" என்ற அபூர்வ [illegible] நிற்கும் பாலமுருகன் வண்ணப் படம் 450 இரும் [illegible] தூள் [illegible] கக் கிடைக்கிறது. இருப்பு உள்ளவரை மட்டுமே. முந்துங்கள், "[illegible]"

(ஏ-4222

தற்கொலை

(சாவகச்சேரி)

இளம் பெண் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று கடந்த 11ம் திகதி [illegible] கொடிகாமத்தில் நடந்துள்ளது.

திருமதி பிரதீபா [illegible] ராசா 19 வயது) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார். 155

எதையும் தாங்கிக்கொள்ள நாம் தயாராக உள்ளோம்!

— சந்திரிகா

(யாழ்ப்பாணம்)

எமது வாழ்க்கை முறையை இன்று நாம் எல்லோரும் முற்றிலும் மாற்றிக்கொண்டோம். மின்சார வெளிச்சத்தைக் கொண்டு எமது கல்வியைக் கற்று வந்தோம். [illegible] மின்சார அடுப்புக்களில் [illegible] செய்தோம். ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. நாம் எதையும் தாங்கிக்கொள்ளத் தயாராகவுமுள்ளோம்.

நேற்றுமுன்தினம் [illegible] சனசமூக நிலையத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட [illegible] வேளாண்மைப் போட்டியில் பங்குகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் கல்வி அமைப்பு [illegible] பொறுப்பாளர் செல்வி சந்திரிகா இவ்வாறு கூறினார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு. [illegible] தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வி சந்திரிகா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: எதிரியானவன் எம்மீது [illegible] மான அழுத்தங்களைக் கொடுத்து வருகிறான். எந்தவிதமான தடைகள் [illegible] போட்டாலும் இவைகளையெல்லாம் நாம் முறியடித்து எமது சுதந்திரப் போராட்டத்தில் முன்னேறுவோம்.

எமது மக்கள் இன்று பல தடைகள் மத்தியிலும் வளர்ச்சி பெற்று வருகிறார்கள். இதுபோன்று எமது போராளிகளும் வளர்ச்சி பெற்றுள்ளார்கள். இந்த வளர்ச்சிக்கு எமது மக்களின் தேசியமான போக்கும், நிதானமான வழிநடத்தலுமே காரணம் என்றார்.

[illegible] வேளாண்மைப் போட்டியில் பங்குகொண்டு வெற்றியீட்டிய [illegible] தவர்கள் இவ்விழாவில் [illegible] வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

162 இ

நல்லூர் திருவிழா காலத்தில் தொழில்நுட்ப கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆண்டுதோறும் நல்லூர் திருவிழாவின் போது நடாத்தப்படும் உற்பத்தி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி இம்முறையும் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவான தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பை நோக்கி சென்று கொண்டிருக்கும் தமிழீழ தேசத்தில் பொருண்மிய அடித்தளமாய் அமைகின்ற மூலவளம், தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள, கண்டுபிடிக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களை மக்கள் பார்வையிட்டு அறிவு பெறும் நோக்கில் இம்முறை மாபெரும் கண்காட்சி நடைபெற ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது.

புதிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை மேற்கொண்டவர்களும், முன்மாதிரி செய்மை [illegible] பட்ட இறந்த [illegible] பயிற்சி பெற்றவர்களும் நவீன [illegible] கண்டுபிடிப்புகளும் [illegible] கண்டுபிடிப்புக்கள் உற்பத்தி முயற்சிகள் என்பனவற்றை மக்கள் மத்தியில் பார்வைக்கு வைக்க விரும்பின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலக [illegible], [illegible] அலுவலகம் [illegible] உற்பத்திக்குழுக்கள் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பரிசளிப்பு விழா

(வேலணை)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளையினர் [illegible] நடாத்திய பொது அறிவு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை கிளையின் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். [illegible] சபை ஆணையாளர் திரு. வே. [illegible] கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசுகளை வழங்கினார். - 75

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

லயன்ஸ் கழக நிர்வாகிகள் பதவியேற்பு

(பண்டத்தரிப்பு)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 1994/95 வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு வைபவம் கடந்த 10ம் திகதி சாவகச்சேரியிலுள்ள டொக்டர் கே. சி. [illegible] தின் இல்லத்தில் நடைபெற்றது.

முன்னாள் பிராந்தியத்தலைவர் டொக்டர் எமில் [illegible] னார் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேற்படி லயன்ஸ் கழகப் புதிய தலைவராக திரு. [illegible] ராஜா பதவி ஏற்றுள்ளார். கடந்த காலப் பகுதியில் சாவகச்சேரி பகுதியில் பல்வேறு சமூக சேவைத்திட்டங்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் செயல்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (72)

இரு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும்

மாபெரும் வெற்றுப்போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர்

இலக்கங்களும், பெயர்களும் வருமாறு:

1-ம் பரிசு:	8934	சுவர் மணிக்கூடு	[illegible], 13, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
2-ம் பரிசு:	1996	எவர்சில்வர் பொருட்கள்	நா. த. நடராசா (S. M) அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
3-ம் பரிசு:	1992	T. சேட்	நா. த. நடராசா (S M) அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

ஆறுதல் பரிசுகள்

1-ம் பரிசு:	6510	குடை	B. [illegible], 300, கோவில்வீதி, யாழ்ப்பாணம்.
2-ம் பரிசு:	7973	தொப்பி / சாப்பாட்டுப்பெட்டி	மு. நிமலன் சுதுமலை தெற்கு, [illegible] தெற்கு, மானிப்பாய்
3-ம் பரிசு:	1999	[illegible]	இ. செந்தூரன், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.
4-ம் பரிசு:	7072	பாடசாலைப் பை	N. சபேசன், 92, [illegible] றோட், திருநெல்வேலி.
5-ம் பரிசு:	7301	பிளாஸ்டிக் வாளி	வே. [illegible], ஜும்மா தெரு, பள்ளிவாசல், யாழ்ப்பாணம்.
6-ம் பரிசு:	529	எவர்சில்வர் பேணிகள்	வ. சிவசுப்பிரமணியம், ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
7-ம் பரிசு:	530	கைமணிக்கூடு	வ. சிவசுப்பிரமணியம், ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

இரண்டாவது சீட்டிழுப்பு
செப்டம்பர் 15-ம் திகதி 1994 வியாழக்கிழமை நடைபெறும்.

★ இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள்.

∘∘ இன்றிலிருந்து 15-8-94ற்கு முன் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

ரேஸ்டலேன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிடெட்,
14, சினியர் லேன், யாழ்ப்பாணம்.

(ஏ-4221)

தமிழீழத்தின் பிரபலமான
சமூக பொருண்மிய விஞ்ஞான
ஆய்வு இதழான

∘∘ ஆதாரம் ∘∘

சஞ்சிகையினை
யாழ்ப்பாணத்தில்
வடமராட்சி, தென்மராட்சி
வலிகாமம் போன்ற இடங்களில்
விற்பனை செய்யக்கூடிய
விற்பனை முகவர்கள்
பின்வரும் விலாசத்துடன் தொடர்பு
கொள்ளவும்.

ஆதாரம்
செய்தித் தொடர்பு வெளியீட்டுக் கிளை,
முதன்மைச் செயலகம்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்,

தாவடி,
தமிழீழம்.

∘∘ தெரிவாகும் முகவர்களுக்கு
நியாயமான
விற்பனைக்கழிவு வழங்கப்படும்.

∘∘ விண்ணப்ப முடிவுத் திகதி
23-07-1994

(ஏ-4220)

மணிவாக்கு

சிந்தனையில்லாத படிப்பு பலனில்லாத உழைப்பே. படிப்பில்லாத சிந்தனையோ ஆபத்தானது.

- கன்பூசியஸ்

நமது நோக்கு

தேர்தலுக்குப் பின்...

ஆகஸ்ட்-16 தேர்தலுக்குப்பின் - ஐ. தே. க. வென்றால் - அந்த வெற்றி அறிவிப்பின் கூட்டோடு கூடாக ஜனாதிபதி தேர்தலை நடாத்தி இந்த நூற்றாண்டு வரை அரசு தொடர்ந்து செயற்படும்.

ஆனால் பலரது கணிப்பின்படி பொதுஜன முன்னணி வெற்றி பெற்றால், நிலைமை என்ன?

தற்போதைய ஜனாதிபதி 3-2-95 வரை சட்டப்படி பதவியிலிருப்பவர்.

1978 யாப்பின்படி ஜனாதிபதியே அமைச்சரவைக்குத் தலைமை தாங்கவேண்டும்.

அப்படியானால் ஐ தே. க. தலைவர் பொதுசன முன்னணி அமைச்சரவைக்குத் தலைமை வகித்தால் சங்கடங்கள் தோன்றலாம்.

இதற்கும் பரிகாரம் என்ன? 1970-77 வரை சட்டமா அதிபராக இருந்து பின் நீதியமைச்சுச் செயலாளராக இருந்தவர் நிஹால் ஜயவிக்கிரமா.

இவரது குடியுரிமையைப் பறித்தது ஐ. தே. க அரசு. நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டிலே சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம்பெற்றதோடு சர்வதேச நீதிமன்றத்திலும் பணியாற்றியவர்.

இவரது கருத்து என்ன? இத்தகைய நிலை ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என 1978ம் யாப்பைத் தயாரிக்கும்போதே ஜே. ஆரிடம் கேட்டிருக்கிறார்.

அத்தகைய நிலை ஏற்படின் கட்சித்தலைமையை ராஜினாமாச் செய்து யாப்பின்படி ஜனாதிபதிக்கான கடமைகளைச் செய்வேன் எனக் கூறியிருந்தார்.

இன்றைய நிலையில் இது நடைமுறைச் சாத்தியமாகுமா? வேறு வழி உண்டா?

யாப்பின் 37வது பிரிவின்படி சில காரணங்களுக்காக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரையே அடுத்த ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் வரை பதில் ஜனாதிபதியாக நியமித்துவிட்டு பதவி விலகலாம்.

தனது கட்சி தோல்வியடைந்து விட்ட காரணத்தைக் காட்டி டி. பி. விஜயதுங்கா பதவி விலகலாம் என்பதற்கு வழி காட்டுகிறார் சட்டநிபுணர்.

பொதுசன முன்னணி வென்றால் ஜனாதிபதியாக டி. பி. தொடர்ந்திருப்பது புத்திசாலித்தனமற்றது. இது மறைமுகமான எச்சரிக்கை.

ஐ. தே. க. வினர் பழி வாங்கல் படலங்களுக்கு சுமுகமாக இருப்பார்களா?

சிறிலங்கா அரசிடம் அரசியல் நியாயம் எதுவும் இல்லை!

— அரசண்ணா உரை

(சாவகச்சேரி)

யாழ் மாவட்டத்தில் வாக்குப்பெட்டி இல்லாத நிலையில் வாக்குப்போடாமல் விருப்பம் தெரிவிக்கப்படாத நிலையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவ்வாறு மீசாலை அல்லாரையில் நடைபெற்ற லெப். சீலன், வீரவேங்கை ஆனந்தன் ஆகியோரின் பதினொராவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் அரசியல் நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. அரசண்ணா கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். கொடிகாமம் வடக்குப் பொறுப்பாளர் திரு. அமுதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது!

சந்திரிகா வடக்கு கிழக்கு எங்களுக்குச் சமஷ்டி என்கின்றார். சிறிமா அம்மையார் வடக்கு கிழக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை என்கின்றார். இருவருடைய கருத்துக்களுக்குமிடையில் முரண்பாடு உள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதையும் முழுமையாகத் தெரிவிக்கவில்லை. ஐ. தே. கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் தீர்வு இல்லை என்னும் ராணுவத்தீர்வு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிக்குகளிடம் டி.பி. கூறுகிறார் வடக்கு கிழக்கு பற்றி புலிகளிடம் நான் எதுவும் பேசவில்லை என்று. எந்த ஒரு தீர்வையும் சிங்கள அரசு எப்பொழுதும் வைக்கத் தயாரில்லை.

உலகில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாக நாங்கள் இருக்கின்றோம். சிங்கள அரசிடம் அரசியல் நியாயமும் இல்லை. இராணுவ வெற்றியும் இல்லை. 2500 கோடி ரூபாய் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட நிலையிலும் 1010 கோடி ரூபா ஆயுதங்களுக்கு இன்னும் தேவைப்படுகின்றது என்று கூறினார்.

இந்நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. தங்கன், மூத்த உறுப்பினர் திரு. தேவர் அண்ணா, மாவீரர் வீட்டைச் சேர்ந்த தமிழ்ச்செல்வி உட்படப் பலர் உரையாற்றினர். 155 ம

இன்று

(யாழ்ப்பாணம்)

தவில் வித்துவான் கோண்டாவில் திரு பி. கணேசனுக்கு பாராட்டு விழா இன்று மாலை 6 மணிக்கு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (59)

நுளம்புத் தொல்லை

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் அநேகமான கிணறுகள் துப்பரவு செய்யப்படாததாலும், குப்பைகள் தேங்கி இருப்பதாலும் நுளம்புத் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது. (59)

மண்ணெண்ணை ஊற்றி இளம் பெண் தற்கொலை

(தெல்லிப்பழை)

தனது உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீவைத்துக்கொண்ட பெண் தீக்காயங்களுடன் மந்திகை மருத்துவமனையில், சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி மரணமானார்.

வடமராட்சி கிழக்கு மாமுனை ஆதிமுருகாமில் இத்துயரச் சம்பவம் கடந்த ஞாயிறு இடம் பெற்றது.

சந்திரகுமார் அருந்தமலர் (வயது 23) என்னும் இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு பரிதாபமாக மரணமடைந்தவராவார். -160

ஐ. தே. க. வெற்றிபெற கடும் போட்டி

(கொழும்பு)

கடந்த 30 வருடங்களில் எதிர்நோக்காத கடும்போட்டியை எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சி எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

இதேவேளையில் ஸ்ரீலங்கா கட்சி ஆட்சியின்போது நாடு பெரும் பொருளாதார சீரழிவுக்கு உட்பட்டது என்பதனை மக்களுக்கு மீண்டும் நினைவூட்டும் வகையில் ஆளும் ஐ. தே. கட்சி செய்திப்பத்திரிகைகள் மற்றும் பிரசாரங்கள் மூலம் மக்களுக்கு நினைவூட்டும் விதத்தில் பிரசாரம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருவது போலத் தென்படுவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (ஏ-இ)

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994- 07- 18 திங்கள்
இரவு

08-01 [illegible] நிகழ்ச்சி
08-20 செய்திச்சரம்
08-30 செய்திகள்
08-40 தரிசனம்

1994-07 19 செவ்வாய்
காலை

07-02 மாவீரர் வணக்கம்
07-15 இன்றைய [illegible]
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

சார்க் உச்சி மாநாடு

ஒத்திவைப்பு!

(புதுடில்லி)

இவ்வருட பிற்பகுதியில் புதுடில்லியில் நடைபெறவிருந்த சார்க் உச்சிமாநாடு, அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது.

உச்சிமாநாடு நடைபெறவிருந்த தேதிகளில் மாநில தேர்தல்கள் நடைபெறவிருந்ததால் சார்க் மாநாட்டைப் பிற்போடுமாறு இந்திய அரசு யோசனை கூறியிருந்தது.

7 நாடுகள் அங்கம் வகிக்கும் சார்க் உச்சிமாநாடு இவ்வருடம் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெற இருந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சு செயலாளர், தமது கருத்தில் சார்க் உச்சி மாநாடு பின்போடுவது வழமைக்கு மாறான ஒரு செயலல்ல என்றும் இதனால் நடைமுறையில் எதுவித பாதிப்பும் நடைபெறமாட்டாது என்றும் தெரிவித்தார். (ரெ)

பலதும் பத்தும்

பஞ்சாமிர்தம்!

பஞ்சாமிர்தம் என்றால் வெறும் பழக்கலவை (Fruit Salad) என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் சிலர்.

வேதவிதியில்—இரச பஞ்சாமிர்தம் என்பது பால், தயிர், நெய், தேன், சர்க்கரை ஆகியவற்றை விதிப்படி கலந்து அபிஷேகித்துப் பாவிக்கும் தொகுதி இந்த அபிஷேகத்தின் பலன் வெற்றி என்பதாகும்.

பஞ்சாமிர்தம் என்பது, இரச பஞ்சாமிர்தத்தோடு மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளின் தொகுதியாகும். இதன் அபிஷேக பலன் செல்வம்!

—மயூரன்

இராசி பலன்

18 07 - 1994
திங்கட்கிழமை
(தமிழுக்கு ஆடி 02)

தசமி ந. ப. 11-56 வரை, விசாகம் பி. ப. 3-09 வரை, மரணயோகம், [illegible], இராகு காலம் காலை 7-30 முதல் 9-00 வரை, சுபநேரம் நண்பகல் 12 00 முதல் 1-30 வரை.

மேடம்: விரோதிமூலம்பயம், மனப்போராட்டம், அச்சம்.

இடபம்: தொழில் கீர்த்தி, மனப் புளகம், மனநிறைவு.

மிதுனம்: ரோக நிவர்த்தி, தொழில் முதலீடு, வழி மாறுதல்.

கடகம்: பயனற்ற செலவு, மனக் கவலை, அடிமை நிலை.

சிம்மம்: மனைவியால் இன்பம், அஜீரணம், அமைதியின்மை;

கன்னி: காரிய சித்தி, உறவினர் சந்திப்பு, விருந்துண்ணல்.

துலாம்: பிறரால் ஏமாற்றப்படல், இடமாற்றம், விரோதம்.

விருச்சிகம்: தொழில்லாபம், பொதுப் பணிச் சிறப்பு, புகழ்.

தனுசு: முயற்சியில் சோர்வு, வயிற்றில் ரோகம், [illegible] வாக்கு.

மகரம்: அதிகார மோகம், நண்பருதவி, இனிய உறவு

கும்பம்: பூமியால் நன்மை, தொழில் உறவு, சுபச்செய்தி.

மீனம்: குறை கேட்டல், சகோதர துன்பம், உடல் அசதி.

ஜோஸ்யர்

தேர்தலுக்கு முன் வடக்கில் பெரும் தாக்குதலுக்கு திட்டம்

(சாவகச்சேரி)

தேர்தலுக்கு முன் மிகப் பெரியதொரு தாக்குதலை நடாத்தி அதில் வெற்றி பெற்று அதன்மூலம் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சியை காப்பாற்ற டி. பி. அரசு எண்ணுகின்றது.

இன்று பலாலியிலிருக்கின்ற படைகள், தேர்தல் நெருங்கும் வேளை எதிர்பாராதவிதமாக வடபகுதிமீது மிகப் பெரியதொரு தாக்குதலை நடாத்த திட்டமிட்டுள்ளனர்;

இவ்வாறு மட்டுவில் லெப். கேணல் பொன்னம்மான் குடியிருப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரசியல் நடுவப் பணியகத்தைச்சேர்ந்த திரு. [illegible] கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: இந்த நாட்டில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் சிங்களவர்கள். எந்தக்கட்சி தமிழரை அழித்தொழிக்கின்றதோ அது தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு இருக்கின்றது. சிங்கள அரசு தமிழ் மக்களைக்கொன்று ஒழிக்கவென போர்விமானங்களையும், பீரங்கிப்படகுகளையும் கொள்வனவுசெய்து தயார் நிலையில் நிறுத்தியிருப்பதுடன் எழுபதாயிரம் துருப்புக்களையும் இங்கு குவித்துள்ளது. எங்களைப் பொறுத்தவரையில் இந்தப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டியவர்களாக இருக்கின்றோம்; அதற்காகப்போராடிக்கொண்டிருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். 155 ம

மாற்றத்தை மக்களே

தீர்மானிக்கட்டும்

— பிரதமர்

(கொழும்பு)

ஐ. தே. கட்சி ஆட்சியின் போது சுமார் 20 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. காணியற்றசுமார் 10 லட்சம் பேருக்கு காணி வழங்கப்பட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் பெரிதும் உயர்த்தப்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 17 வருட ஆட்சியின் பின் மக்கள் ஏன் ஐ. தே. க. வுக்கு வாக்களிக்கவேண்டும் என பி. பி. சி. யின் கொழும்பு நிருபர் ஜோர்ஜ் ஆனி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பது உண்மையல்லவா என பி பி சி நிருபர் மேலும் கேட்டதற்கு பிரதமர் பதிலளிக்கையில்; நான் அப்படி நினைக்கவில்லை மக்களே அதனை தீர்மானிக்கட்டும். ஆனால் பெரும்பான்மை மக்கள் ஐ. தே. கட்சிக்கு வாக்களிப்பார்கள் எனப் பிரதமர் பதிலளித்தார்;

பிரதமர் தமது நியமனப்பத்திரங்களை தாக்கல்செய்ய கொழும்பு செயலகத்திற்கு நேற்றுவந்தபோதே பி பி சி நிருபர் பிரதமரிடம் இந்தப் பேட்டியை எடுத்தார். எ

“தாவரங்களை வளர்த்திடுவோம்
தண்ணீரை பெருக்கிடுவோம்”

கறுப்புநிற கண்ணாடிகளுடன் வாகனங்கள் ஓடத் தடை!

(கொழும்பு)

பிரயாணிகளைப் பார்க்க முடியாதபடி கருநிற மூடப்பட்ட கண்ணாடிகளைக் கொண்ட வாகனங்கள் வீதிகளில் ஓடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபடுதல், குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கு வாகனங்களைப் பயன்படுத்தல், போதைப் பொருள் கடத்தல் என்பன காரணமாக இந்தத் தடையைக் கொண்டுவர வேண்டியுள்ளதென்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் தலைவரான பிரதிபொலிஸ்மா அதிபர் பீ. சேனைய நாயகம் தெரிவித்தார்.

வாகனங்களில் இருப்பவர்களை இனம் காண முடியாதபடி மறைப்புச் செய்யப்பட்ட வாகனங்கள் பொலிஸாரினால் நிறுத்தப்படும். நிறங்களை உடனடியாக அகற்றுமாறு வாகனச் சொந்தக்காரர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இந்த உத்தரவுக்கு பணிந்து நடக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகின்றது. (ம-வி)

ஜனாதிபதி விஜே திருமலை வருகிறார்

(திருமலை)

ஜனாதிபதி விஜேதுங்க இம்மாதம் 27ம் திகதி திருமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இத்தாலியின் நிதியுதவியுடன் 48 கோடி ரூபா செலவில் திருமலையில் அதிநவீன ஆஸ்பத்திரி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரியை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நவீன வைத்தியசாலையில் புதிய சத்திர சிகிச்சை தொகுதி மற்றும் தீவிர கண்காணிப்புப்பிரிவு வார்ட்டுகளுக்கான விடுதிகளும் அடங்கியுள்ளன. -வி

தேர்தல் கடமைகளுக்காக

பொலிஸாருக்கு அரசவாகனங்கள்

(கொழும்பு)

அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் வாகனங்கள் எதிர்வரும் தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்கென பயன்படுத்தப்படவுள்ளன.

பொலிஸாரிடமும், பாதுகாப்புப் படையினரிடமும் போதியளவு வாகனங்கள் இல்லாத காரணத்தினாலேயே இந்த வாகனங்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் பாதுகாப்பு கடமைக்காக பொலிஸாருக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் இந்த வாகனங்கள் விரைவில் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக கிண்ண போட்டி சுவீடன் 3-வது இடம்

(நியூயோர்க்)

உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் சுவீடன் அணி மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது. பல்கேரியாவுக்கு நான்காம் இடம்.

நேற்று முன்தினம் நடைபெற்ற 3-வது இடத்திற்கான போட்டியில் சுவீடன் அணி பல்கேரியாவை 4—0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து 3ம் இடத்தை பெற்றது.

போட்டியின் முதல் பாதி நேரத்தில் 8வது, 30வது, 37-வது, 39வது நிமிடங்களில் சுவீடன் அணி 4 கோல்களையும் போட்டு வெற்றி பெற்றது. -வி

ஆசியாவில் 'எய்ட்ஸ்' வேகமாகப் பரவுகிறது

(நியூயோர்க்)

உயிர்க்கொல்லி நோயான 'எய்ட்ஸ்' ஆசியாவில் வேகமாக பரவிக் கொண்டு வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில்; உலகெங்கிலும் சுமார் 40 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இவ்வெண்ணிக்கை 20 லட்சமாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளது.

எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 1 வீதத்திலிருந்து 6 வீதத்திற்கு அதிகரிப்பதாகவும் எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் 10 ஆண்டுகளுக்குள், ஆபிரிக்காவில் இருந்ததை விட அதிகமாக ஆசியாவில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-வி)

இனப்பிரச்சினையைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

கிழக்கு மாகாணத்தை இராணுவம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது என்றும் ஜனாதிபதி விஜேதுங்க அங்கு கூறினார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாருக்காக யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு வீதி, [illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under licence Number B/10330/D

தேர்தல் குறித்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலைக் கொண்டு இரு பிரதான கட்சிகளும் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் இந்தத் தடவை ஒரேமாதிரியானவையாகவுள்ளது. பொதுசன முன்னணி அறிவிப்புகள் பல ஐ.தே.க. விஞ்ஞாபனத்திலும் இடம் பெற்றுள்ளது. ஐ.தே.க.வினருக்கு தேர்தல் கொள்கைகள் வெளியிடுவதில் வங்குரோத்து நிலை ஏற்பட்டுள்ளதை இது காட்டுகிறது எனவும் தெரிவித்தார். -வி

பொ. ச. மு. கூட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு காரணம் கூறுவதாக இருந்தது.

கண்டியில் நடைபெற்ற ஐ.தே.க கூட்டத்துக்கு ஜனாதிபதி சமூகமளித்தபடியால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கூட்டத்தில் அப்படியான ஒழுங்குகள் இருக்கவில்லை. சுதந்திரமாக நடைபெற முடிந்தது.

இக்கூட்டம் ஆரம்பமாக முன்னர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் திருமதி சந்திரிகாவும் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சமாதியில் அஞ்சலி செலுத்தினதும் குறிப்பிடத்தக்கது. ம.வி

அவசரகாலச் சட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றுமாதங்களுக்குச் செல்லுபடியாகுமெனப் பாதுகாப்பு அமைச்சின் சட்டப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கமைய, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தற்போது தடுப்புக்காவலில் இருக்கும் 3,000க்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் விசாரணை எதுவுமின்றி வைக்கப்படுவர். இதற்கு மேற்படி சட்டமும் அனுமதி வழங்குவதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

அடுத்த மூன்று மாத காலத்தினுள் 11வது பாராளுமன்றம் கூடி, அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்காவிட்டால் தடுப்புக்காவலில் உள்ளோர் விடுதலை செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படும். மேற்படி நிலைமைகளை அடுத்து வரும் அரசே தீர்மானிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. -வி

தேர்தலுக்கு முன்னர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் கோரவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

முக்கியமாக 3 கோரிக்கைகள் மன்னிப்புச் சபையின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

★ அரசியல் கைதிகள் விடயத்தில் மனித உரிமைகள் முழுமையாக தெரிவித்திருக்கும் விதிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

★ கைதுசெய்யப்படுவோர், தடுக்கப்படுவோர் விடயத்தில் மனித உரிமைகள் பேணப்படவேண்டும். அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரித்துக் குற்றமற்றவர் எனில் விடுதலை செய்யவேண்டும்.

★ உலகமனித உரிமைகள் சாசனத்தின் 2 (5) தீர்மானத்திற்கும், ஜெனிவா சட்டத்தின் 2வது தீர்மானத்திற்கும் எல்லோரும் மதிப்பளிக்க வேண்டும்.

எதிர்வரும் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ம-வி

● கொழும்பில்

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் கைது!

(கொழும்பு)

கொழும்பில் தமிழ்மாணவர்கள் பரவலாக படையினரால் கைதுசெய்யப்படுவதால் எதிர்வரும் 1ம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றமுடியாத நிலை ஏற்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தனியார் கல்வி நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்லும் மாணவர்களே பெருமளவில் படையினரால் கைதுசெய்யப்படுகின்றனர்.

இம்மாணவர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்ற வேண்டியிருப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் விளக்கமளித்தும்கூட எதுவித பலனும் ஏற்படவில்லையாம். (ம-வி)

தமிழ் குழுக்கள் — ராணுவம் கிழக்கில் முறுகல் நிலை

(கொழும்பு)

கிழக்கில் அரச படையினருக்கும், தமிழ்க் குழுக்களுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆகஸ்ட் 16ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் விடயத்திலேயே இருதரப்பினரும் முரண்படுகின்றனராம்.

தமிழ்க் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மேற்கொண்டுவரும் பிரசார நடவடிக்கைக்கு அரச படையினர் இடையூறு விளைவிக்கின்றனராம்.

இதேவேளையில் சிலசமயங்களில் தமிழ்க் குழுக்கள் பிரசாரம் மேற்கொள்ளும்போது அவர்களை எச்சரித்துவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்தில் அரச படையினர் ஈடுபட்ட சம்பவங்களும் நடைபெற்றதாக அறியவருகின்றது.

இவ்வித நடவடிக்கையினால் இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் பெரும் இன்னலுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வால் நட்சத்திரம்

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

மோதி வெடித்தபோது, தீப்பிழம்பு சுமார் 1,000 கிலோமீற்றர் உயரத்துக்கு எழுந்தது. இதன் விளைவாக 2,000 கிலோமீற்றர் விட்டமுடைய நெருப்புப் பந்து ஒன்று தோன்றியது.

முதலில் மோதிய துண்டு பெரியது அல்ல. மிகச் சிறிய துண்டே. இது மேலும் 20 துண்டுகள் வியாழனுடன் மோத இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வால்வெள்ளித் துண்டுகள் மணித்தியாலத்திற்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் சென்று வியாழன் கிரகத்துடன் மோதுகின்றன. இந்த மோதலினால் வெளிப்படும் சக்தி நினைத்துப் பார்க்கமுடியாத அளவாகும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இடியோசை

பலத்த இடியோசையுடன் இந்தத் துண்டு வியாழன் கிரகத்துடன் மோதியது. இந்த நிகழ்வைப் பூமியில் இருந்து பார்க்கக்கூடியதாக இருந்ததிலும், விண்வெளியைச் சுற்றி வரும் 'ஹபிள்' என்ற தொலைநோக்கி மூலம் படங்கள் எடுக்கப்பட்டன.

இத்தகைய நிகழ்வு லட்சக்கணக்கான வருடங்களுக்கு ஒரு தடவை சம்பவிக்குமென இந்த வால்வெள்ளியைக் கண்டுபிடித்தவர் தெரிவித்துள்ளார். இந்த மோதலினால் வியாழன் கிரகத்தின் மேற்பரப்பில் 3,000 சதுர மைல் அகலமான ஆழமான பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

இது பற்றி ஷூமேக்கரும், அவரது சக விஞ்ஞானியுமான டேவிஸ் லெவியும் குறிப்பிடுகையில், வால்நட்சத்திரத்தின் 21 துண்டுகள் அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாக 6 மணி நேர இடைவெளியில் 5 தினங்களுக்குள் வியாழன் கிரகத்துடன் மோதக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வால்நட்சத்திரத்தின் துண்டுகள் மணிக்கு 20லட்சம் கிலோமீற்றர் வேகத்தில் வியாழன் கிரகத்துடன் மோதிக்கொண்டிருக்கின்றன.

இத்துண்டுகள் ஒவ்வொன்றும் மலையளவில் இருக்கின்றன. அவை வியாழன் கிரகத்தின் மீது மோதும்போது சுமார் 2 லட்சம் மெகாதொன் வெடிகுண்டு வெடிக்கும்போது எத்தகைய வெடிப்புச் சக்தி ஏற்படுமோ அத்தகைய வெடிப்புச் சக்தி ஏற்படும் எனச் சில விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை முதலாவது துண்டு மோதி வெடித்ததை ஸ்பெயின், சிலி மற்றும் சில நாடுகளிலிருந்து விஞ்ஞானிகள் நவீன தொலைநோக்கிகள் மூலம் அவதானித்தனர். மேகமூட்டம் காரணமாக இந்திய விஞ்ஞானிகளால் இந்நிகழ்வைப் பார்க்கமுடியவில்லையாம்.

வால் நட்சத்திரத்தின் இரண்டாவது பகுதி, இன்று அதிகாலை சுமார் 3-00மணியளவில் வியாழன் கிரகம் மீது மோதும் என்றும், கடைசித் துண்டு எதிர்வரும் 20ம் திகதி வியாழன் கிரகத்தைத் தாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அண்டவெளி மோதல் என வர்ணிக்கப்படும் இச்சம்பவத்தை உலகம் முழுவதிலும் உள்ள விஞ்ஞானிகள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர். ம-வி

தடுப்புக்காவல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருக்கப்பட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது உள்ள சூழ்நிலையில் அரசு அரசியல் மற்றும் தீவிரவாத செயல் தொடர்பாகக் கைதுசெய்வோரையும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் எதுவித விசாரணையுமின்றி வைத்திருக்கும் என அவதானிகள் கூறியுள்ளனர். -வி

தீவுப் பகுதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க வேண்டுமென தமிழ்க் கட்சிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலரை வற்புறுத்தி வருவதை தொடர்ந்தே இவர்களுக்கு கடற்படையினர் பாதுகாப்பு வழங்கவுள்ளனராம்.

அடுத்த சில தினங்களில் தமிழ் கட்சி வேட்பாளர்கள் தீவுப்பகுதிக்கு வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஏனைய கட்சி வேட்பாளர்கள் தீவுப்பகுதிக்கு வராதவாறு தடுக்க ஈ.பி.டி.பி. முனைந்துள்ளதாகவும் இதனை தீவுப் பகுதியிலுள்ள மக்கள் விரும்பவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

தேர்தல் வன்செயல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] அதிபர் ஐ. வை ரத்தினம் தெரிவிக்கையில், கொழும்பிலே அதிகளவு, பல முறைகேடுகள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபின் இடம்பெற்றதுபோல் வன்செயல்கள் ஏதும் ஏற்படவில்லை.

இம்மாதம் 11ம் திகதியிலிருந்து 13ம் திகதிவரை 165 முறைப்பாடுகள் கிடைத்தன. நேற்றுமுன்தினம் 8 முறைப்பாடுகளே கிடைத்தன எனவும் கூறினார். -வி